சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள்

பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!



சென்னை, அக். 30- திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், தலைமைக் கழக அறிவிப்பின்படியும், தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், கொலை, கொள்ளை, போதைப்பொருள் புழக்கம், சட்டம்-ஒழுங்கு சீர்கேடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து, வருகின்ற 31.10.2026 சனிக்கிழமையன்று மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தைச் சிறப்பாக நடத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் இன்று (29.10.2026) மாலை 5.00 மணியளவில் சென்னை ஓட்டேரி, பிரிக்ளின் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஆர். மகாலில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்கள் கலந்துகொண்டு, கண்டன ஆர்ப்பாட்டத்தை மாபெரும் மக்கள் எழுச்சியாக நடத்துவது குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன்,ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், கே.எஸ். ரவிச்சந்திரன், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, பி.கே. மூர்த்தி, எம். விஜயகுமார், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், கே.எஸ்.எம். நாதன், ஆர். வரதன்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் ஜி.எம்.தேவன்,புனிதவதி எத்திராஜன்,இசட் ஆசாத்,

பகுதிக் கழகச் செயலாளர்கள் எம். சாமிக் கண்ணு, சொ. வேலு, வி. சுதாகர், எஸ். ராஜசேகர், கூ.பீ. ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சாவித்திரி வீரராகவன், டி.வி. செம்மொழி, கோ. மணி, அ.நிர்மலா தேவி, சரிதா மகேஷ்குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், எம். இப்ராகிம் கனி

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், கே. வினோத், பி. ஸ்ரீராமலு, நா. ரஞ்சித் விஜயாலயன்,ஜி தாமோதரன், எல்.பி.எஃப். மோகன், து. ஆயிரம்,இரா. வீரமணி, கு. கிருஷ்ணமூர்த்தி, பி. விஜயகுமார், பா. பிரதீப்குமார், எம். விநாயகம், எல். சம்பத்குமார், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, ம. அசோக்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், ஜி. சாந்தகுமாரி உள்ளிட்டோரும்,

மேலும் பகுதிக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளைத் தொடர்ந்து சுட்டிக்காட்டி, த.வெ.க. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து, மக்கள் உரிமைகளுக்காக அயராது குரல் கொடுத்து வரும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் புழக்கம், பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருவதாக எழுந்துள்ள புகார்களும், இரண்டு வயதுக் குழந்தை முதல் 80 வயது மூதாட்டி வரை பாலியல் வன்முறைக்கு ஆளாகும் கொடூரச் சம்பவங்களும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறுகின்ற த.வெ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

தொடர் மின்வெட்டு, மின்கட்டண உயர்வு, அரிசி, பருப்பு, சமையல் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தவே அல்லல்படும் நிலை ஏற்பட்டுள்ளது. குடும்பச் சுமையால் பெண்கள் கண்ணீர் சிந்தும் நிலையை மாற்றாமல், மக்களின் வேதனைகளைப் புறக்கணிக்கும் த.வெ.க. அரசுக்கு இக்கூட்டம் கடும் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுகிறது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மேனாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை, சட்டம்- ஒழுங்கு சீர்கேடு, போதைப்பொருள் புழக்கம், மின்கட்டணம் மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து, வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி - மகளிர் தொண்டரணி சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக நிர்வாகிகள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டரணியினர், கழக மகளிர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு பங்கேற்று, ஆர்ப்பாட்டத்தை மாபெரும் வெற்றியடையச் செய்ய வேண்டுமென இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

சமூக வலைதளங்களில் வலம் வருவது!



சட்டம் ஒழுங்கு சீர்கேடு – பாலியல் குற்றங்கள்– குழந்தைகள் கடத்தல்

த.வெ.க. அரசை கண்டித்து திருவாரூரில் மகளிர் அணியின் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவாரூர், அக்-30.

தமிழ்நாட்டில் பெருகி வரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு , பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் , குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலை வாசி உயர்வு உள்ளிட்ட பெருகிவரும் துயரங்களை கண்டித்து திமுக மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது இதுகுறித்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது.

நீதிக்காட்சியின் நீட்சியாய், 77 ஆண்டுகால இரும்புக் கோட்டையாய் இந்தியாது ணைக்கண்டத்தின் மாபெரும் ஜனநாயக பேரியக்கமாய் உருவெடுத்து , பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா,



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் உள்ளிட்ட தமிழினத் தலைவர்கள் உழைப்பாலும் தியாகங்களாலும் உருவான திராவிட முன்னேற்றகழகத்தை தேர்தல் களத்தில் வீழ்த்திவிட முடியாது என்பதால் , வெறும் சினிமா மோகத்தை கைகளில் எடுத்து , தரமாற்றவர்களின் தவறான யோசனைகளின்படி பெண்களையும் , குழந்தைகளையும் பகடைகாய்களாக்கியும் குறுக்கு வழியில் ஆட்சிக்கு வந்த தவெக அரசு இப்போது தங்கள் வெற்றிபெற காரணமாய் இருந்த அந்த அப்பாவி பெண்களையும் குழந்தைகளையும் வஞ்சித்து வருகிறது.

பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்களை தம் கட்சி நிர்வாகிகளின் துணையோடு செய்துவருகிறது. குழந்தைகளை இரக்கமின்றி கடத்தும் கும்பலை தடுக்க மனமின்றி வேடிக்கை பார்க்கிறது. கண்ணியத்தோடு குடும்பம் நடத்திவந்த குடும்ப பெண்களை தங்களின் திறனற்ற ஆட்சிநிர்வாகத்தால் விலைவாசிகளை ஏற்றி துன்பத்தில் தள்ளி வருகிறது.

தவெக ஆட்சியின் இந்த ரீல்ஸ் மோக ஆட்சியை கண்டிக்கும் வகையில் கழகத் தலைவர் தளபதி, எதிர்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி கழக மகளிர் அணியின் சார்பில் 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு , திருவாரூர் கலைஞர் பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலை எதிர்புறம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது.

இந்த ஆர்ப்பட்டத்தில் மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,தலைமை செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், கிளை-வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி உள்ளிட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்க அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பூண்டிகே. கலைவாணன் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

த.வெ.க. அரசைக் கண்டித்து அக். 31-ல் திருவள்ளூரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட மகளிர் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும்!

மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வேண்டுகோள்!

திருவள்ளூர், அக். 30:

திருவள்ளூர் மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில், அக்டோபர் 31ஆம் தேதி திருவள்ளூரில் நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திமுக தலைமைக்கழக அறிவிப்பின்படி, பெண்களின் பாதுகாப்பு, சட்டம்ஒழுங்கு சீர்கேடு, போதைப்



பொருள் புழக்கம், விலைவாசி உயர்வு, மின் கட்டண உயர்வு மற்றும் மின்பற்றாக்குறை உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் மகளிர் அணி சார்பில் அக்டோபர் 31ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதன் ஒரு பகுதியாக, ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில், சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருவள்ளூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும், விலைவாசி உயர்வைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், பொதுமக்களுக்குத் தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

எனவே, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த மகளிர் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று, கண்டன ஆர்ப்பாட்டத்தில் தங்களது பங்களிப்பை வழங்கி நிகழ்ச்சியைச் சிறப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் பொன்னேரி மற்றும் கும்மிடிப்பூண்டியில் மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள் அன்னியூர் சிவா, பா.அப்துல் மாலிக் ஆகியோர் முன்னிலையில், கழக மறுசீரமைப்புப் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, ஜி.ஸ்டாலின், கி.வேணு ஆனந்த், மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, நா.பரிமளம், ஜான் பொன்னுசாமி, நா.செல்வசேகரன், ஞாயிறு வே.ஆனந்த் குமார், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், க.சு.ஜெகதீசன், இரா.அறிவழகன், கா.தமிழ் உதயன் உள்பட பலர் உள்ளனர்.



பயிர் கடன் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி திருச்சி சமயபுரம் அருகே போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை இருங்கலூர் அருகே போலீசார் வலுக்கட்டாயமாக கைது செய்தனர். இதனால் திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பரபரப்பு ஏற்பட்டது.